*6*

# "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!"

## (பிலிப்பியர் 2:1-4)

*ஈசாப் என்பவரின் கதைகளில்[1] ஒன்று, "நான்கு எருதுகளும் சிங்கமும்" என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கதை பின்வருமாறு செல்கிறது: நெருங்கிய நண்பர்களாயிருந்த நான்கு எருதுகள் இருந்தன. அவை ஒன்றாகப் பயணம் செய்தன, ஒன்றாக உணவு உண்டன மற்றும் ஒன்றை மற்றவை பாதுகாக்கும்படி ஒன்றுக்கொன்று நெருக்கமாகத் தங்கியிருந்தன. இருப்பினும் அவற்றைத் தின்பதென்று ஒரு சிங்கம் தீர்மானித்தது. அந்தச் சிங்கம் அந்த எருதுகளில் எந்த ஒன்றுடனும் சரிசமானமாகப் போராட முடியும், ஆனால் அவை நான்குடனும் ஒரே நேரத்தில் போராட இயலாது - எனவே அந்தச் சிங்கம் ஒரு திட்டம் வகுத்தது. எப்போதெல்லாம் ஒரு எருது மற்றவற்றிலிருந்து சற்றுப் பின்தங்கிச் சென்றதோ, அப்போதெல்லாம் அந்தச் சிங்கம் அந்த எருதின் காதில், அதன் மற்ற மூன்று நண்பர்களும் அதைப்பற்றி இரக்கமற்ற விஷயங்களைக் கூறுகின்றன என்று கிசுகிசுக்கும். சற்றுக் காலத்திற்குப் பின்பு, ஒவ்வொரு எருதும் மற்ற மூன்றும் தனக்கு எதிராகத் திட்டம் வகுக்கின்றன என்று முடிவு செய்து, அவை ஒவ்வொன்றும் தனது தனிவழியில் சென்றன. இவ்வாறாக அந்தச் சிங்கம் நான்கு நல்ல பெரிய விருந்துகளைப் பெற்றுக்கொண்டது.[2] இந்தக் கதை பின்வரும் "ஒழுக்கநெறியுடன்" முடிகிறது:* ["United we stand; divided we fall."[3]] *"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு."*

*புகழ்பெற்ற இவ்வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையானது உலகம் முழுவதிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[4] அரசியலாளர்கள் இதன் உண்மையை ஒப்புக் கொள்கின்றனர். 1769ல், ஜான் டிக்கின்ஸ்[5] என்பவர் தமது சகக் குடிமக்களிடத்தில், "எனவே, வீர அமெரிக்கர்களே, நாம் யாவரும் கையோடு கை கோர்த்து நிற்போம்! நாம் யாவரும் ஒன்றுபட்டிருத்தலால் நிமிர்ந்து நிற்கிறோம், பிரிந்திருத்தலால் நாம் வீழ்ந்துபோகிறோம்" என்று வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொண்டார். இராணுவ வியூகம் வகுப்பவர்கள் இதன் உண்மையை ஒப்புக்கொள்கின்றனர். "பிரித்துவைத்து வெற்றிகொள்" என்பது ஒரு பழங்கால அமெரிக்கப் பழமொழியாக உள்ளது.[6] இவ்வார்த்தைகள் மதத்தில் இருமடங்கு உண்மையாக உள்ளது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் ஒன்றாயிருக்க வேண்டும் என்று ஜெபித்தார் (யோவான் 17:20-23) மற்றும் பின்வரும் பொதுவான உண்மையை உரைத்தார்: "ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே" (மாற்கு 3:24).*

"ஒரு கிறிஸ்தவர் செய்ய வேண்டிய 'ஒரே' விஷயம்" என்ற பாடத்தில் நாம், "சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம்" நாம் நடந்துகொள்ள வேண்டியதன் மீது கவனம் குவித்தோம் (பிலிப்பியர் 1:27). "நடந்துகொள்ளுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது, நாம் பரலோக ராஜ்யத்தின் குடிமக்களாயிருத்தலுக்குச் சீர்பொருத்தமான வகையில் நடந்துகொள்ள வேண்டியதைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று குறிப்பிட்டோம். சிந்தை, இருதயம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் ஒன்றிணைந்திருத்தல் என்பது அதைச் செய்வதற்கான ஒரு வழியாக உள்ளது:

> நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள் (1:27).

> நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள் (2:2).

ஒரு நாட்டின் குடிமக்கள் பிரிந்து இருக்கும்போது, அவர்கள் தங்கள் விரோதிகளுக்குச் சுலபமாக இரையாகி விடுகின்றனர். பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் பிரிந்திருக்கும்போது, அவர்கள் தங்கள் அரசருக்குச் சங்கடமாயிருப்பது மாத்திரமல்ல (காண்க 1 கொரிந்தியர் 1:10-13; கலாத்தியர் 5:19-21), ஆனால் அவர்கள், "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிற" (1 பேதுரு 5:8) தங்கள் "எதிராளியால்" சுலபமாகத் தாக்கப்படக் கூடியவர்களும் ஆகின்றனர்.

பிலிப்பியர் 2:1-4, இந்தப்பாடத்திற்கான நமது வேதவசனப் பகுதியாக உள்ளது. நாம் ஒரு புதிய அதிகாரத்தைத் தொடங்கினாலும், பிலிப்பியர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கலந்துரையாடலைப் பவுல் இதிலும் தொடர்ந்தார். 2ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள "ஆதலால்" என்ற வார்த்தையானது இதை 1ம் அதிகாரத்தின் முடிவுப் பகுதியுடன் பிணைக்கிறது. முதல் நான்கு வசனங்களின் வலியுறுத்தம் ஐக்கியத்தின் மீதுள்ளது.

## ஆவியில் ஐக்கியமாயிருத்தல் (2:1, 2)

1:27-30ல் பவுலின் வாசகர்கள் உறுதியாக நிலைநிற்க வேண்டும் என்றும் தங்களின் விரோதிகளால் பயமுறுத்தப்பட்டவர்களாக இருந்து விடக்கூடாது என்றும் பவுல் புத்திகூறினார். இப்போது, 2ம் அதிகாரத்தின் திறப்பு வசனங்களில் அவர், சககிறிஸ்தவர்களிடத்தில் இருந்து ஆதாயப்படுத்தப்பட்டு இருக்கக் கூடிய நிலைப்புத்தன்மையும் பலமுமே, அசைக்கப்படாமலும் அச்சமில்லாமலும் நிலைத்திருப்பதற்கான திறவுகோல் காரணியாக உள்ளது என்று வலியுறுத்தினார். அவர்கள் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு இருப்பதற்கு, அவர்கள் *ஐக்கியமாக* இருத்தல் அவசியமாயிற்று.

இந்த அதிகாரம், கலந்துரையாடலின் கீழ் உள்ள தலைப்பின்

முக்கியத்துவத்தை அடிக்கோடிட வடிவமைக்கப்பட்டுள்ள இலக்கியக் கருவி ஒன்றுடன் தொடங்குகிறது: "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்" (வசனம் 1). "ஆல்" என்ற வார்த்தையானது வழக்கமாக ஒரு நிபந்தனையை அறிமுகப்படுத்தி அதைத் தொடர்ந்து வருவது விஷயமாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இந்த வசனத்தில் பவுல், அவ்வார்த்தையை அந்த வகையில் பயன்படுத்தவில்லை. மாறாக அதை அவர், குறிப்பிட்ட சத்தியங்களை வலியுறுத்த, ஏவுதல் பெற்ற சொற்கலை விளக்கத்தின் பகுதியாகப் பயன்படுத்தினார். 1ம் வசனத்தில் [உண்டானால்] "ஆல்" என்பதற்குப் பதிலாக [உண்டாகி,] "இருப்பதால்" என்ற சொல்லைப் பதிலாகப் பயன்படுத்தினால் இவ்வாக்கியத்திற்கு எந்த ஊறும் செய்யப்படுவதில்லை.

குறிப்பிட்ட பண்புகள் வசனத்தைக் கடந்து போகுதலில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன, ஆனால் இயேசுவுக்குள் நாம் கொண்டுள்ள ஆசீர்வாதங்களின் மிகச்சிறந்த தொகுப்புரை ஒன்றைக் கண்டறிதல் கடினமாயிருக்கும்:

- "… கிறிஸ்துவுக்குள் … ஆறுதல்": "ஆறுதல்" [இது ASV வேதாகமத்தில் உற்சாகப்படுத்துதல் என்று அர்த்தப்படும் "encouragement" என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது (Gk.: *paraklesis*) "பக்கமாக அழைத்தல்" என்று நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இது, உதவிக்கு யாரேனும் ஒருவரை "பக்கமாக அழைத்து" இருத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இது (ASV) "புத்திமதிகூறுதல்" அல்லது (KJV) "ஆறுதல்" என்றும் மொழிபெயர்க்கப்படமுடியும். [தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] NCV வேதாகமம், "கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்வு, உங்களுக்கு பலத்தைக் கொடுத்துள்ளதா?" என்று கேட்கிறது. "ஆம்!" என்ற திரும்ப ஒலிக்கும் வார்த்தையே நமது பதிலாக உள்ளது.
- "அன்பினாலே … தேறுதல்": "தேறுதல்" [இது ASV வேதாகமத்தில் "consolation" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] என்பதற்கான வார்தையானது (Gk.: *paramuthia* இது "உடன் பேசுதல்" என்று அர்த்தப்படுகிறது) "ஆறுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது; இது "தேற்றுதல்" (KJV, NIV) அல்லது "தூண்டுதல்" (RSV) என்று கூட அர்த்தப்படக்கூடும். NCV வேதாகமம், "அவரது அன்பு உங்களைத் தேற்றுகிறதா?" என்று கேட்கிறது. ஆம், அது அவ்வாறு செய்கிறது! தேவன் தமது குமாரனை அனுப்புமளவுக்கு அன்புகூர்ந்தார் (யோவான் 3:16), மற்றும் அவர் நாள்தோறும் தமது அன்பைத் தொடர்ந்து காண்பிக்கிறார் (ரோமர் 8:39).
- "ஆவியின் … ஐக்கியமும்": "ஆவி" என்ற வார்த்தை மனித ஆவியையோ அல்லது பரிசுத்த ஆவியானவரையோ அர்த்தப்படுத்தக் கூடும். மனித ஆவியே இவ்விடத்தில் அர்த்தப்படுத்தப்படுகிறது என்று நம்புகிறவர்கள்,

மூலவசனத்தில் "ஆவி" என்பதற்கான வார்த்தைக்கு முன்னால் ("the" என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் இல்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றனர். இருப்பினும் மிகப்பரவலாகப் பயன்படுத்தப்படுகிற மொழிபெயர்ப்புகள், "Spirit" என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக ஆக்கும்படி அதில் பெரிய "S" என்ற எழுத்தை இடுகின்றன (KJV, NKJV, ASV, NASB, NIV, RSV). இது சரியானதாக இருக்கும் என்று யூகித்த நிலையில், "ஆவியின் ஐக்கியம்" என்பது "ஆவியானவருடன் ஐக்கியம்'' என்பதையோ (காண்க NIV மொழிபெயர்ப்பு) அல்லது "ஆவியானவரால் நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஐக்கியம்" என்பதையோ சுட்டிக் காண்பிக்கக்கூடும். இவ்விரண்டில் எந்தவித விளக்கமும் சாத்தியமானதாக உள்ளது, மற்றும் இவ்விரண்டுமே முக்கியமான சத்தியங்களைக் குறிப்பிடுகின்றன; ஆனால் பிந்தியது இவ்விடத்தில் அதிகம் பொருத்தமானதாக இருக்கச் சாத்தியம் உள்ளது. நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்ற (முழுக்காட்டப்பட்ட) போது, தேவனுடைய ஆவியானவரை நாம் ஒரு கொடையாகப் பெற்றோம் (நடபடிகள் 2:38), மற்றும் அது நம்மை ஐக்கியப்படுத்த வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 12:13). ரிச்சர்டு கேஃபின் என்பவர், இவ்விடத்தில் "விசுவாசிகள் ஒவ்வொருவருக்குள்ளும் தங்கியிருக்கும் ஆவியானவரால் விசுவாசிகளுக்கு இடையில் உண்டாக்கப்பட்ட ஐக்கியம் [காண்க 2 கொரிந்தியர் 13:14]" என்பதற்கான குறிப்பு உள்ளதென்று முடிவு செய்தார்.[7] "இது, கர்த்தருக்குள் சகோதரர்களாக இருக்கும் நாம், ஒரே ஆவியானவரைப் பகிர்ந்து கொள்கிறோம் என்ற எதையாவது உங்களுக்கு அர்த்தப்படுத்துகிறதா?" (LB) அது அவ்வாறு செய்யவேண்டும்!

- "... உருக்கமான பட்சமும் இரக்கங்களும்": தேவனுடைய அன்பை அறிந்திருப்பவர்கள் மற்றவர்கள் மீது அன்புகூர வேண்டும் (1 யோவான் 4:11; காண்க கொலோசெயர் 3:12). பிலிப்பியர்கள் பட்சத்தையும் இரக்கத்தையும் பெற்றிருந்தார்களா? ஆம், அவர்கள் அவற்றைப் பெற்றிருந்தனர் (காண்க பிலிப்பியர் 1:8) - மற்றும் நாமும் அவ்வாறே பெற்றிருக்கிறோம்!

ஆவிக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும், நம்மைப் போன்றே பிலிப்பியர்களும் அனுபவித்திருந்தனர். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் ஆசீர்வாதங்களை உங்களுக்குத் தரப்பட வேண்டியவைதான் என்பது போன்று ஒருக்காலும் நினைக்காதிருங்கள்! அவைகள் பொதுவான/சாதராணமாக இடத்திற்கு உரியவைகளாக அனுமதிக்காதீர்கள்.

1ம் வசனத்தில் தரித்திருக்கும்படி நாம் சோதிக்கப்படுகையில், பவுலின் கருத்தை நாம் பெற்றுக் கொள்வது அவசியமாக உள்ளது. பிலிப்பியர்கள் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததால், அப்போஸ்தலர் ஒரு வேண்டுகோளைக் கொண்டிருந்தார். 2ம் வசனத்தில் அவர், "... என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" என்று கூறினார் (வசனம் 2ஆ). பிலிப்பி நகரில் இருந்த சகோதரர்கள் ஏற்கனவே அவரை சந்தோஷமுள்ளவர் ஆக்கியிருந்தனர் (1:3, 4; 4:1); இப்போது செயல் விளைவில் அவர், "அந்த சந்தோஷத்துடன் [சந்தோஷத்தை] கூட்டுங்கள்" என்று கூறினார். "நிறைவாக்குங்கள் என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க

வார்த்தை "நிரப்புவதற்கு"[8] என்று அர்த்தப்படுகிறது; KJV வேதாமத்தில் "fulfill" ("fill full") என்றுள்ளது. J. B. Lightfoot என்பவரின் மொழிபெயர்ப்பில் "எனது சந்தோஷத்தின் பாத்திரத்தை நிரம்பி வழியும்படி நிரப்புங்கள்" என்றுள்ளது.[9]

பவுலின் சந்தோஷத்தை நிரம்பிவழியச் செய்வது எதுவாக இருக்கும்? பிலிப்பியர்கள் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்வுடன் அனுபவித்தனர் என்று கேள்விப்படுவதே ஆகும்: "நீங்கள் ஏக சிந்தையும் [நேரடியான அர்த்தத்தில், "ஒன்றையே நினைத்து"] ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் [நேரடியான அர்த்தத்தில், "ஒரே ஆத்துமாவாக"] ஒன்றையே சிந்தித்து [நேரடியான அர்த்தத்தில், "ஒரே விஷயத்தையே சிந்தித்துக் கொண்டிருந்து"], என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (2:2). இவ்விடத்தில் உள்ள வார்த்தை அமைப்பானது 1:27ல் உள்ள வார்த்தை அமைப்பைப் போன்றுள்ளது: அவர்கள் *கவனித்தலில்* (சிந்தித்தலில், "ஒரே சிந்தையுள்ளவர்களாக இருந்து") மற்றும் *எண்ணப்போக்கில்* ("இசைந்த ஆத்துமாக்களாய்") ஒன்றாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். இருப்பினும், அவர் இரண்டு புதிய கூறுகளைக் கூடுதலாகக் கூறினார்: அவர்கள் *பிரியத்தில்* ("ஏக அன்புள்ளவர்களாயிருந்து") மற்றும் *குறிக்கோளில்* ("ஏக சிந்தையும்") ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். பிலிப்பியர்கள் ஒரே இருதயமும், ஒரே சிந்தையும் ஒரே வாழ்வும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். 1ம் வசனத்தின் நினைவூட்டுதல்கள் 2ம் வசனத்தின் வேண்டுகோள்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட முடியும் என்று எழுத்தாளர்கள் உற்று நோக்கியுள்ளனர்:

- "கிறிஸ்துவுக்குள் ஆறுதல்" இருப்பதால் (வசனம் 1), "ஏக சிந்தையுள்ளவர்களாக" இருங்கள் (வசனம் 2).
- "அன்பின் தேறுதல்" இருப்பதால் (வசனம் 1), "ஏக அன்பை" பராமரியுங்கள் (வசனம் 2).
- "ஆவியானவரின் ஐக்கியம்" இருப்பதால் (வசனம் 1), "இசைந்த ஆத்துமாக்களாக" இருங்கள் (வசனம் 2).
- "உருக்கமான பட்சமும் இரக்கங்களும்" இருப்பதால் (வசனம் 1), "ஒன்றையே சிந்தித்து" இருங்கள் (வசனம் 2).

ஒருமித்து இருத்தல் என்பது மதிப்புமிக்க பண்பாக உள்ளது - கிறிஸ்துவினிமித்தமாக அப்படி இருத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது! இயேசுவைத் தேவன் அனுப்பியிருந்தார் என்று உலகத்தார் விசுவாசிப்பதற்காக, இயேசுவைப் பின்பற்றுபவர்கள் "ஒன்றாயிருக்க" வேண்டும் என்று இயேசு ஜெபித்தார் (யோவான் 17:21, 23). பிரசங்கியின் புத்தகத்தை எழுதியவர், ஒன்றாயிருத்தலில் இருந்து தரவழைக்கப்பட வேண்டிய பலத்தைப் பற்றிப் பேசினார்: "ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (4:12). "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுகிற" தனிநபர், தேவன் வெறுக்கிற விஷயங்களில் ஒருவராக இருக்கிறார் (நீதிமொழிகள் 6:19). ஒருமித்து இருத்தலின் ஆசீர்வாதம் மற்றும் பிரிவினையின் சாபம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும் பிற வசனப்பகுதிகள், ஆதியாகமம் 14:8; ரோமர் 15:5; 16:17;

1 கொரிந்தியர் 1:10; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 4:1-6 ஆகியவையாகும்.

இந்த எடுத்துரைப்புகளுக்காகப் படித்ததில் நான், ஐக்கியத்திற்கு எதிராகப் பேசுவதற்கு, குறிப்பாக போதனை மற்றும் உபதேசம் ஆகிய பகுதிகளில் ஐக்கியத்திற்கு *எதிராகப்* பேசுவதற்கு பிலிப்பியர் 1:27 மற்றும் 2:2 ஆகிய வசனப்பகுதிகளை எத்தனை எழுத்தாளர்கள் பயன்படுத்தினர் என்பதை அறிந்து நான் திகைத்தேன். அவர்களில் பெரும்பான்மையானவர்கள், "ஐக்கியம் என்பது வேறுபாடற்று இருத்தல் என்பதல்ல" என்று உறுதிப்படுத்தினர். நாம் யாவரும் வேறுபாடுள்ளவர்களாக இருக்கிறோம், அதாவது எல்லாவற்றிலும் நாம் கருத்து ஒருமித்தவர்களாக இருக்கத் தேவையில்லை என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் அப்படியிருந்தாலும், ஒரு அடிப்படை ஐக்கியத்தைத் தேவன் கேட்கிறார்.

"விசுவாச விஷயங்களில் ஐக்கியம்; அபிப்பிராய விஷயங்களில் சுயாதீனம், மற்றும் எல்லா விஷயங்களிலும் அறச்சிந்தனை [அதாவது அன்பு]" என்பது, கடந்த காலத்தில் அடிக்கடி கேட்கப்பட்ட சுலோகமாக இருந்தது. "விசுவாச விஷயங்கள்" என்பவை தேவனுடைய வசனத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்ட கொள்கைகளாக உள்ளன என்று புரிந்துகொள்ளப்பட்டது (காண்க ரோமர் 10:17). இவற்றில் நாம் ஐக்கியமாக இருக்க *வேண்டும்*. "அபிப்பிராய விஷயங்கள்" என்பவை வேதாகமத்தில் திட்டவட்டமான கூற்றுகள் காணப்படாத பாடக்கருத்துக்களைப் பற்றியவையாக உள்ளன. இவற்றில் நாம் கருத்து வேறுபடக்கூடும் - ஆனால் கருத்து ஒருமைப்பட இயலாத நிலையில் இல்லாத வகையில் நாம் இதைச் செய்ய வேண்டும் (எபேசியர் 4:1-3ல் *ஆவியானவரின்* ஐக்கியத்தின் மீதான போதனையைக் காணவும்). சில வேளைகளில் சகோதரர்கள், ஒரு குறிப்பிட்ட போதனையானது "விசுவாச விஷயமாக" உள்ளதா அல்லது "அபிப்பிராய விஷயமாக" உள்ளதா என்பது பற்றிக் கருத்து வேறுபடுகின்றனர், ஆனால் மேற்கூறப்பட்ட சுலோகத்தினால் வெளிப்படுத்தப்பட்ட அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்பது, சிந்தனை மற்றும் போதனையில் அடிப்படை ஐக்கியத்தை விளைவிக்கிறது. எல்லா விஷயங்களிலும் நாம் *அன்பினால்* தூண்டப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதும் உண்மையாகவே உள்ளது.

நாம் எல்லா விஷயங்களிலும் கருத்து ஒருமைப்பட்டு இருக்க வேண்டும் என்று அவசியமில்லை - ஆனால் விளக்கவுரையாளர்கள் இவ்வசனத்தின் கருத்து அழுத்தத்தில் நிலைத்திருந்து இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எல்லாரும் இல்லையென்றாலும் அவர்களில் சிலர் தங்கள் விளக்கத்தை முடித்திருந்தபோது, இவ்வசனப் பகுதியிலிருந்து "ஐக்கியம்" என்பது பிழிந்து வெளியே எடுக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொரு நபரும் "தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி" செய்தல் (நியாயாதிபதிகள் 21:25) ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது என்ற மனப்பதிவு விடப்பட்டது. நாம் "ஒரே சிந்தை" கொண்டிருக்கவும் "ஒரே அன்பை" பராமரிக்கவும், "ஆவியில் ஐக்கியம்" கொண்டிருக்கவும், மற்றும் "ஒன்றையே சிந்தித்து" இருக்கவும் கடுமையாக முயற்சி செய்யத் தேவன் நமக்கு உதவுவாராக!

## சுயநலமற்ற தன்மையில் ஐக்கியமாயிருத்தல் (2:3, 4)

ஆளுமைத் தன்மைகள் மற்றும் விருப்பத் தேர்வு ஆகியவற்றில் நாம்

வேறுபட்டு இருப்பதால், நாம் எவ்வாறு ஐக்கியமாக இருக்க முடியும்? அனேகமாக, இயேசுவின் மீதான நமது பொதுவான விசுவாசமே நமது ஒருமைப்பாட்டில் முக்கியமான காரணியாக உள்ளது எனலாம். நாம் யாவரும் "அவருடன் இணைக்கப்பட்டு" இருப்பதால் (ரோமர் 6:5), நாம் ஒருவர் மற்றவருடனும் இணைக்கப்பட்டு இருக்கிறோம். இருப்பினும் சககிறிஸ்தவர்களைக் குறித்த நமது எண்ணப்போக்குகள் முக்கியமானவையாக உள்ளன. நாம் சுயத்தை மைய மாகக் கொண்டிருக்கும்போது மற்றும் அபிப்பிராயத்தின் விஷயங்களில் நமது சொந்த வழியைக் கொண்டிருக்கும்போது, ஐக்கியம் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.

3 மற்றும் 4ம் வசனங்களில் பவுல், சுயநலமின்மையின் தேவையை வலியுறுத்தினார். இந்த வசனங்களில் அவரது அறிவுறுத்துதல்கள் கீழ்ப்படியக் கடினமானவையாக உள்ளது - ஆனால் அவை மிகவும் அவசியமானவைகளாக உள்ளன! 3ம் வசனம், "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல்," என்று தொடங்குகிறது. ஆங்கில வேதாகமத்தில் இது, "Do nothing from selfishness or empty conceit" என்றுள்ளது, இதில் "selfishness" என்பது, 1:17ல் "selfish ambition" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வந்துள்ளது. அவ்வார்த்தை, விரோதத்தை உண்டாக்கியாவது பின்பற்றாளர்களை ஆதாயப்படுத்த முயற்சி செய்யும் நடைமுறையை மறைமுகமாக உணர்த்துகிறது. துரதிர்ஷ்டவசமாக, சகோதரர்கள் "ஊழியத்தையல்ல ஆனால் தங்களையே மேன்மைப்படுத்திக் கொள்வதற்காக" ஊழியம் செய்ய முடிகிறது.[10] "சுயநலப்பேரார்வம்" என்ற கருத்துடன், "வீண்பெருமை" என்பது இணைந்துள்ளது. இதை NCV வேதாகமம் "பெருமை" என்று தரவழைக்கிறது. இந்தச் சொற்றொடர், "வெறுமையான மகிமை" என்று அர்த்தப்படும் கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமக்குத்தாமே பெருமையைத் தேடிக்கொள்ளுதல் என்பது ஒருவருடைய நோக்கமாக இருக்கும்போது, கடைசியில் அந்த "மகிமை" வெறுமையானதும் பயனற்றதுமாக இருக்கும்.

சுயமையம் மற்றும் பெருமை ஆகியவற்றிற்கு நிவாரணம் எது? 3ம் வசனம், "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்று தொடருகிறது. "மனத்தாழ்மை" என்பது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட வார்த்தையாக உள்ளது. சிலர், இது ஒருவர் தம்மை மதிப்பற்றவராகக் கருதுதல் என்று அர்த்தப்படுவதாக யூகிக்கின்றனர், ஆனால் அது உண்மையல்ல. மோசே "மிகவும் தாழ்மையுள்ளவர்" என்று விவரிக்கப்பட்டிருக்கிறார் (எண்ணாகமம் 12:3), ஆனால் இந்த மாபெரும் நடத்துநர், தாம் மதிப்பற்றவராக இருந்ததாக நினைத்தார் என்பதை எந்த ஒன்றும் சுட்டிக் காட்டுவதில்லை. இயேசு தம்மை, "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்று விவரித்தார்" (மத்தேயு 11:29; காண்க-பிலிப்பியர் 2:8), ஆனால் அவர் தமக்கு அருளப்பட்டிருந்த மகிமையைப் பற்றியும் பேசினார் (யோவான் 17:22; காண்க யோவான் 2:11). எஜமானர் சுயத்தை மதிப்புக்குலையச் செய்வதில் தமது நேரத்தை வீணாக்கவில்லை.

கிரேக்கர்கள் தாழ்மைக்கு மதிப்பு எதையும் வைக்கவில்லை. இவ்வார்த்தையின் பெயர் உரிச்சொல் வடிவம், "ஒரு அடிமையின் மனநிலையை விவரிக்க ... பயன்படுத்தப்பட்டது. இது சிறுமையான, தகுதியற்ற, இழிநிலையில்

*உள்ள ... கணக்கில் கொள்ளப்படாத என்ற கருத்துக்களைக் கொண்டுவந்தது."*[11] *புறதெய்வத்தை வணங்குபவர் "தாழ்மையானவர்" என்று பெயரிடப்பட்டு இருத்தலில் திகில் அடைந்திருப்பார். இருப்பினும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், தாழ்மையை ஒரு ஒழுக்க நெறியாக - மிக உயர்ந்த ஒழுக்க நெறிகளில் ஒன்றாக - ஏற்படுத்தினர். பேதுரு பின்வருமாறு எழுதினார்,*

> *... நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.*
>
> *ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேதுரு 5:5, 6).*

*தாழ்மையாயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நமது பேச்சு மற்றும் நடக்கை ஆகியவற்றில் தன்னடக்கமாக இருத்தலின் அவசியம் பற்றி நாம் பேசக்கூடும். எந்த மனிதரும் "தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" இருக்க வேண்டும் என்ற பவுலின் புத்திமதியின் மீது நாம் கலந்துரையாடக்கூடும் (ரோமர் 12:3). இருப்பினும், பிலிப்பியர் 2:3, 4ல் "மனத்தாழ்மை" என்ற சொற்றொடரைத் தொடர்ந்து வருகிற வார்த்தைகளின் மூலம், இதற்கு மிகச்சிறப்பான விளக்கம் கருத்தாகத் தெரிவிக்கப்படலாம்: "... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக."*

*தாழ்மை என்பது சுயத்தைத் தாழ்த்துதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, சுயத்தை மறத்தல் என்பதாக உள்ளது. இது, ஒருவர் தம்மைப் பற்றி மோசமாக நினைத்தலாக இருப்பதில்லை; இது ஒருவர் தம்மைப் பற்றிச் சிறிதளவே சிந்திக்கும் அளவுக்கு பிறரைப் பற்றி மிகவும் அக்கறையாக இருத்தலாக உள்ளது. நமது வேதவசனப் பகுதியைத் தொடர்ந்து வரும் வசனங்களில் பவுல், நமக்கு மிக மேன்மையான உதாரணத்தைக் கொடுத்தார்: இயேசு. செயல்விளைவில் கிறிஸ்து தம்மையே "மறந்து போகும் அளவுக்கு* நம்முடைய *தேவைகளைக் குறித்து அக்கறையாயிருந்தார்," இந்த பூமிக்கு வந்து, நமக்காக மரித்தார் (வசனங்கள் 5-8). பவுல் தமது வாசகர்கள் அதே "சிந்தையை" கொண்டிருக்கும்படி அறைகூவல் விடுத்தார் (வசனம் 5).* R. C. *பெல் என்பவர், "தாழ்மையான சிந்தை உடையவர்கள் மாத்திரமே ஒரே சிந்தையுடையவர்களாக இருக்க முடியும்" என்று கூறினார்.*[12]

*3ம் வசனத்தின் பிற்பகுதியுடன் சிலர் போராடுகின்றனர்.* NASB *வேதாகமத்தில் "ஒருவர் பிறரைத் தங்களிலும் அதிக முக்கியமானவர் என்று மதியுங்கள்" என்றுள்ளது. "தங்களிலும் அதிக முக்கியமானவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது, huper ("மேலே") என்ற முன்னிடைச் சொல்லை echo ("பற்றிக்கொள்ள") என்ற சொல்லுடன் இணைத்து வரும் கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. நேரடியான பொருளில் இது "மேலே பற்றிக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது. உருவக நடையில் இது, "மேன்மையானவராக இருத்தல், மிகச்சிறப்பானவராக இருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.*[13] *தரம்வாய்ந்த பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகளில்*

*3ம் வசனத்தில் "தங்களிலும் மேன்மையானவர்கள்" என்றே உள்ளது* (KJV, NKJV, ASV, NIV, RSV). *இதை நாம், வலுவூட்டப்பட்ட இரண்டாவது பிரதான கட்டளை" என்று நினைக்கலாம். இரண்டாவது பிரதான கட்டளையானது, "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று கூறுகிறது (மத்தேயு 22:39; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "வலுவூட்டப்பட்ட இரண்டாவது பிரதான கட்டளையானது," "உன்னைக் காட்டிலும் மேன்மையாக உன் பிறனிடத்தில் அன்புகூருவாயாக" என்று கூறுகிறது.*

*ஒருவர் தம்மைக் காட்டிலும் மற்றவர்களை மேன்மையானவர்களாக மதிக்க வேண்டும் என்பதற்கான புத்திமதியானது சிலரைக் கவலையில் ஆழ்த்துகிறது. அவர்கள் சககிறிஸ்தவர் ஒருவரைச் சுட்டிக்காண்பித்து, "இவரை என்னிலும்* மேன்மையானவராக *அல்லது என்னைக் காட்டிலும் அதிக முக்கியமானவராக நான் நினைக்க வேண்டியது ஏன்? அவர் என்னைக் காட்டிலும் மேன்மையான கல்வித் தகுதி உடையவரல்ல ... அல்லது என்னைக் காட்டிலும் அதிக தாலந்துகளை உடையவரல்ல ... அல்லது என்னை காட்டிலும் அதிக திறனுடையவர் அல்ல ... அல்லது என்னை காட்டிலும் அதிக பலமுடையவர் அல்ல ... அல்லது என்னைக்காட்டிலும் உயர்வான தோற்றம் கொண்டவரல்ல ... அல்லது என்னைக் காட்டிலும் அதிக தேவபக்தி உடையவர் அல்லவே!" என்று கேட்கின்றனர். இவ்வாறாக விவாதிப்பவர்கள் இவ்வசனப் பகுதியின் இருதயம் போன்ற மையப்பகுதியைத் தவற விட்டுள்ளனர். இது, இன்னொரு தனிநபர் உங்களைக் காட்டிலும் மேன்மையானவராக* இருக்கிறார் *என்று கூறுவதில்லை; இது இன்னொரு தனிநபரை உங்களைக் காட்டிலும் மேன்மையானவராக* எண்ண வேண்டும் *என்று தான் கூறுகிறது. சந்தர்ப்பப் பொருளில் இது, அவரது* தேவைகளை *உங்கள் தேவைகளைக் காட்டிலும் அதிக முக்கியமானவையாகக் கருதுதலைக் குறிப்பிடுகிறது. பவுல், " 'மற்றவர்களை உங்களைக் காட்டிலும் முன்வரிசையில் இடுங்கள்' என்று மிகச்சிறப்பான வகையில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கக்கூடிய முதல் நூற்றாண்டு சொல்விளக்கம் ஒன்றை" பயன்படுத்தினார் என்று ஏர்ல் பால்மர் என்பவர் கருத்துத் தெரிவித்தார்.[14] நீங்கள் எப்போதாவது, மக்கள் இடித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும், வரிசையின் முன்பகுதிக்கு நெருக்கமாகச் செல்வதற்கு முயற்சி செய்யும் ஒரு வரிசையில் நின்றிருந்தால் நீங்கள் இந்த ஒப்புவமையைப் புரிந்துகொள்வீர்கள். நாம் மற்றவர்களைக் கண்ணோக்கும் வகையினை மேம்படுத்துவதற்கு, "அந்த நபர் போன்று நான் பிறந்து வளர்க்கப்பட்டிருந்தால், அவரது திறமைகள் மற்றும் வாய்ப்புகள் மாத்திரமே எனக்கு அளிக்கப்பட்டு இருந்தால், நான் எவ்வாறு இருப்பேன்?" அல்லது, "அந்தத் தனிநபர் எனது வீட்டிற்குள் வளர்க்கப்பட்டு எனது திறமைகள் மற்றும் வாய்ப்புகள் அவருக்கு அளிக்கப்பட்டு இருந்தால், அவர் எவ்வாறு இருப்பார்?" என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம்.*

*3ம் வசனத்தின் பிற்பகுதியை நான் வாசிக்கையில், எனது பெற்றோர்களைப் பற்றி நான் நினைக்கிறேன். எனது சகோதரர் காய் என்பவரும் நானும், [அமெரிக்க] நாட்டின் வறுமைக் காலத்தில் பிறந்தோம். எனது பெற்றோர்கள் கொஞ்சப் பணமே கொண்டிருந்தனர், ஆனால் அவர்களுக்குக் கனிகளும் காய்களும் இல்லாதபோதும் கூட, காய்க்கும் எனக்கும், நாங்கள் ஆரோக்கியமாக இருப்பதற்குத் தேவையான கனிகளும் காய்களும்*

கிடைப்பதை அவர்கள் நிச்சயப்படுத்திக் கொண்டனர். அவர்கள் தங்களைக் காட்டிலும் எங்களை "அதிக முக்கியமானவர்களாக" மதித்தனர் - அது நாங்கள் அவர்களைவிட பெரியவர்களாக, பலமானவர்களாக அல்லது மதிநுட்பம் வாய்ந்தவர்களாக இருந்தோம் என்பதால் அல்ல - ஆனால் அவர்கள் எங்களை நேசித்ததாலேயே அவ்வாறு செய்தனர்.[15]

நாம், கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளிடம் இதே வகையான எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்று பிலிப்பியர் 2:3, 4 வசனப்பகுதி நம்மை வற்புறுத்துகிறது. அன்பானது மற்றவர்களை "மேலானவர்களாக" மற்றும் "அதிக முக்கியமானவர்களாக" நாம் கண்ணோக்கக் காரணமாகும். பிள்ளைகளுக்கான பாடல் ஒன்று, "ச-ந்-தோ-ஷ-ம், ச-ந்-தோ-ஷ-ம், J-O-Y, J-O-Y, என்றுள்ளது. இது நிச்சயமாகவே இயேசு (Jesus) முதலிலும், நீங்கள் (you) கடைசியிலும், மற்றவர்கள் (others) இடையிலும் இருப்பதையே அர்த்தப்படுத்த வேண்டும்" என்று கூறுகிறது. சற்றுக் காலத்திற்கு முன்னர், "என்னுடையது - மூன்றாம்" தரம் என்று அழைக்கப்பட்ட சிறுபிள்ளைகளுக்கான வேதபாட வகுப்பைப் பற்றி வாசித்தேன்.[16] அந்தப் பெயரைப் பற்றி நினைத்தவர் யாரோ அவர் பவுல் உற்சாகமூட்டிக் கொண்டிருந்த ஆவியைப் பற்றிய கணநேரத் தோற்றத்தைப் பற்றிக் கொண்டிருந்தார்.

நமது வேதபாடப் பகுதியானது, பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (வசனம் 4). வேதாகமம், சுயத்தைப் பற்றிய சட்டப்பூர்வமான அக்கறை பற்றிப் போதிக்கிறது (காண்க மத்தேயு 22:39; எபேசியர் 5:28, 29), ஆனால் நாம் சுயத்தை மையமாகக் கொண்டவர்களாகி விடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களின் தேவைகள் குறித்துக் கூருணர்வு கொண்டவர்களாக இருக்க வேண்டும். 3ம் மற்றும் 4ம் வசனங்களில் பவுலின் அறிவுறுத்துதல்கள் பின்பற்றக் கடினமானவையாக உள்ளன. நமது சிந்தனைகள் சுயத்தை மையங்கொள்ளாதிருத்தல் என்பது *கடினமானதாக* உள்ளது!

## முடிவுரை

நாம் இரண்டு சத்தியங்களை வெளிச்சப்படுத்திக் காட்ட முயற்சி செய்திருக்கிறோம்: (1) ஐக்கியத்திற்கான அவசியம் மற்றும் (2) ஐக்கியத்தை ஏற்படுத்துவதின் ஒரு திறவுகோல் காரணி - சுயநலம்இல்லாமை. பின்தொடரும் பாடங்களில் நாம், சுயநலமின்மையின் உதாரணங்களைப் படிப்போம்: இயேசு மற்றும் பவுலின் உடன் ஊழியக்காரர்களில் இருவரான தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிராதீத்து. இந்தப் படிப்பை நாம் முடிக்கும் இவ்வேளையில், இதைப் பற்றிய தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வோமாக. உங்களைப் பொறுத்த மட்டில் ஐக்கியம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? நீங்கள் சேர்ந்து ஆராதிக்கும் சபைக் குழுமத்தில் சமாதானமும் இசைவிணக்கமும் மேலோங்கியிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் எதை விட்டுக் கொடுக்க மனவிருப்பமாக இருப்பீர்கள்? வேதாகமரீதியான சத்தியங்களை சமரசம் செய்து கொள்ளுதல் பற்றி நான் பேசவில்லை. நான் தற்பெருமையையும் சுயநலத்தையும் விட்டு விடுதல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்டவை பிரிவினையைக் கொண்டுவரும்போது, உங்கள் சுயவழியை வலியுறுத்தாமல் இருப்பது பற்றிப்

*பேசிக் கொண்டிருக்கிறேன். பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு!"/"ஐக்கியமாயிருந்தால் நாம் எழுந்து நிற்கிறோம்; பிரிந்து நின்றால் நாம் விழுகிறோம்"!*

---

குறிப்புகள்

[1]ஈசாப் என்பவர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக கருதப்படும் கிரேக்க நாடோடிக் கதைகளின் நாயகர் ஈவார். அவர் மிருகங்களின் கதைகள் பற்றிக் கூறியவராக நினைவுகூரப்படுகிறார். இவைகள் அவரது மரணத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்பு சேகரிக்கப்பட்டு, இவற்றுடன் "ஒழுக்கநெறிகள்" கூட்டப்பட்டன. இவைகள் இன்னமும் குழந்தைகளால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகின்றன. [2]Adapted from Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1172. தமிழில் இவ்விடத்தில் தரப்பட்டுள்ள பாரதியாரின் கவிதை வரி ஏற்புடையதாக உள்ளது. [3]John Bartlett, *The Shorter Bartlett's Familiar Quotations,* ed. Christopher Morley (New York: Permabooks, 1953), 5. [4]அமெரிக்க நாட்டில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, புகழ்பெற்ற பாடல் ஒன்று, "United we stand, divided we fall" என்ற வார்த்தைகளைச் சித்தரித்தது (Tony Hiller and Peter Simons, "United We Stand," © Belwin Mills, 1970). (தமிழில் கூடப் பழைய திரைப்படப் பாடல் ஒன்றில், "ஒண்ணாயிருக்கக் கத்துக்கணும்; இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்" என்ற வரிகள் உள்ளன.) [5]ஜான் டிக்கின்ஸன் (1732-1808) என்பவர், அமெரிக்கப் புரட்சியின்போது, அமெரிக்கக் கண்டத்தின் காங்கிரஸில் ஒரு உறுப்பினராகவும் விடுதலை உணர்வை தூண்டும் கைப்பிரதிகளை எழுதுபவராகவும் இருந்தார். இதைத் தொடர்ந்து வரும் மேற்கோள் - இது *விடுதலைப் பாடலில்* காணப்படுகிறது, இது 1768ல் வெளியிடப்பட்டது - ஒரு நாடு ஒன்றிணைந்து இருக்க வேண்டியதன் அவசியத்தைக் குடிமக்களுக்கு விவரிக்கிறது. உங்கள் நாட்டைச் சேர்ந்த தலைவர்கள் குடிமக்களுக்கு ஒன்றாயிருப்பதன் அவசியம் பற்றி வற்புறுத்தி வேண்டிக் கொண்டிருப்பார்கள் என்றால், அவ்விடத்தில் ஜான் டிக்கின்ஸனின் வார்த்தைகளுக்குப் பதிலாக அவற்றை எடுத்தாளுங்கள். [6]இது (இலத்தீனில்) நிக்கொலோ மாக்கியவல்லி என்பவரால் *யுத்தக்கலை* (1521) என்ற புத்தகத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்டது. மாக்கியவல்லி (1469-1527) என்பவர் இத்தாலியில் புகழ்பெற்ற அரசியல் எழுத்தாளராகவும் இராணுவக் கோட்பாட்டாளராகவும் இருந்தார். [7]Richard B. Griffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1805. [8]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 329. [9]J. B. Lightfoot, quoted in John A. Knight, *Philippians, Colossians, Philemon,* Beacon Bible Expositions (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 61. [10]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 31.

[11]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 69. [12]R. C. Bell, *Studies in Philippians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 19. [13]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 115. [14]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992),

90. [15]*தியாகமான அன்பிற்கான உதாரணங்கள் ஏராளமாக்கப்படலாம். உங்கள் உரையைக் கேட்பவர்கள் மிகச்சிறப்பாக அடையாளம் காணக்கூடியவற்றைப் பயன்படுத்துங்கள்.*
[16]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 79.